ஒரு முடிவை எடுக்கும் என்று மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தி, இப்படிப்பட்ட கிளர்ச்சிகளுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்காமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஒரு எண்ணம் நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகளிடத்திலே இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல் எல்லாவற்றையும் செய்து விடுகிறார்களே இந்த அரசினர் என்று சொல்லி, ஏதாவது ஒன்றைச் சாக்காக வைத்துக் கொண்டு கிளர்ச்சி நடத்தலாமா என்ற மனப்போக்கு வளர்ந்து வருகிறது. அந்த மனப்போக்கு வளராமல் பார்த்துக்கொள்வதற்கு எல்லாக் கட்சிகளும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, இன்னும் தலைநகரம் எங்கே வைப்பது என்பதைப் பற்றி தீர்மானிப்பதற்கு முன்பே கிளர்ச்சி நடைபெற்று இருக்கிறது. ஆகவே, அதற்கான ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி இந்த அளவில் முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) வேலூர் அரசினர் பெண்ட்லேண்டு மருத்துவ மனையில் இறந்த முஸ்லீம் மாது, முஸ்லீம் மரபுப்படி அடக்கம் செய்யப்படாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்கள் "The mysterious death of Mrs. Zaniab Bi, the aunt of the Principal, Nawab Abdul Hakeem Arts College, Melvisharam, at the Government Pentland Hospital, Vellore, on 12th November 1973 where she was knocked down by a rashly driven vehicle on or about 4th November 1973 and the mysterious disappearance of the dead body of the said lady and the consequent unrest that prevails in and around Vellore resulting in all-party agitation fastly spreading in many parts of the district," என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்பு தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைப் பற்றி அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலூர் அரசினர் பெண்ட்லேண்டு மருத்துவ மனையில் இறந்த முஸ்லீம் மாது முஸ்லீம் மரபுப்படி அடக்கம் செய்யப் படாதது குறித்து

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 நவம்பர் 23

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னை கடந்த ஒரு வார கால மாக வடாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக வேலூர் நகரத்தில் பெரிய பரபரப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு வேலூர் நகரத்தில் மக்கள் தங்களுடைய கொந்தளிப்பை வெளியிடும் வகையில் ஊர்வலமும், ஹர்த்தாலும் நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கொந்தளிப்பு மாவட்டத்தின் மற்ற பகுதிகளுக்கும் பரவும் ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மேல்விஷாரம், அப்துல் ஹக்கீம் ஆர்ட்ஸ் காலேஜின் முதல்வராக இருக்கும் அஹமது பாஷாதா அவர்களின் மாமி மேல்விஷாரத்தி லிருந்து மேலூருக்கு பஸ்சிலே 4-ம் தேதி சென்று இருக்கிறார்கள். பஸ்ஸை விட்டு இறங்கிய உடனே அவர்கள் மீது ஏதோ ஸ்கூட்டர் ஒன்று வேகமாக மோதியதாகவும், அதன் காரணமாக அவர்கள் படுகாயம் அடைந்து கீழே விழுந்து விட்டதாகவும் சொல்லப்படு கிறது. உடனடியாக அவர்கள் ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் செல்லப் பட்டு இருக்கிறார்கள். வேலூர் கவர்ன்மெண்ட் பெண்ட்லண்ட் ஹாஸ்பிடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கே அவர்களுடைய பெயர், அவர்களுடைய வயது எல்லாம் குறிக்கப் பட்டு இருக்கின்றது. அவர்கள் செல்லும்போது முஸ்லீம் பெண்கள் எப்படிச் செல்வார்களோ அப்படி பர்தா அணிந்துகொண்டு சென்று இருக்கிறார்கள். அதைக்கொண்டுதான் அவர்களுடைய பெயர் என்னவென்று எழுதியிருக்கிறார்கள். அவர்களை ஹாஸ்பிடலில் அனுமதித்து இருக்கிறார்கள். பிறகு 12-ம் தேதி அவர்கள் அதே நிலையில் இருந்து இறந்து விட்டார்கள். முஸ்லீம் சமுதாயத்திலே ஒரு அனாதைப் பிணமாக இருந்தாலும், வேலூர் பக்கங்களில் என்ன வழக்கம் என்றால், மசூதி அல்லது ஜமாத்து தலைவரிடத்தில் கொடுத்து விடுவார்கள். வேலூரைப் பொறுத்த வரையில் பல நாட்களாக இது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஹாஸ்பிடலிலும் இந்த முறை பின்பற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிணத்தைப் பொறுத்தவரையில் அப்படி தரப்படவில்லை.

1973 நவம்பர் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஏன் அவர்களுடைய சொந்தக்காரர்கள் வரவில்லை என்ற கேள்வி எழுகிற நேரத்தில், அவர்கள் வேலூரில் உள்ள உறவினர் வீட்டில் இருக்கிறார்கள் என்று மேல்விஷாரத்தில் உள்ளவர்களும், மேல்விஷாரத்தில் உள்ள உறவினர்கள் வீட்டில் இருப்பதாக வேலூரில் உள்ளவர்களும் நினைத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவர்கள் மேல்விஷாரத்திலிருந்து வேலூருக்கு வந்து பள்ளிகொண்டா போக வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது. போலீசாரும் சொந்தக்காரர்கள் வீட்டிற்குத் தெரிவிக்கவில்லை. வேலூர் 14-ம் தேதி மாலை முரசில் முஸ்லீம் பெண் இறந்துவிட்டாள் என்ற செய்தியைப் படித்த பிறகுதான் அதனுடைய முக்கியத்துவம் தெரியவந்தது. நான்கூட வாணியம்பாடியில் அந்தச் செய்தியைப் படித்தேன். அவர்கள் அதற்குப் பிறகு வேலூருக்குப் போய் பார்த்திருக்கிறார்கள். அங்கேயில்லையென்றதும் ஹாஸ்பிடலுக்குச் சென்று விசாரித்து இருக்கிறார்கள் அதன் பிறகு அங்கே அவர்கள் காட்டிய துணிகளை வைத்து அவர்களுடைய மாமியின் பிணம்தான் என்று அடையாளம் கண்டிருக்கிறார்கள். ஹாஸ்பிடலில் போலீசின் அனுமதி இல்லாமல், முனிசிபல் சிப்பந்தியிடம் கொடுத்து அதை அடக்கப் படுத்தச் சொல்லி இருக்கிறார்கள். அந்த முனிசிபல் சிப்பந்தியை கேட்டால் அவர் பாலாற்றில் இந்து பிணங்களை வைக்கும் சுடுகாட்டில் அடக்கம் செய்ததாகத் தகவல் தந்திருக்கிறார். முஸ்லீம் சமுதாயச் சடங்குபடி அவரை அடக்கம் செய்ய வேண்டுமென்பதற்காக அந்தப் பிணத்தைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் கிடைக்கவில்லை. உடனே தாசில்தாரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அவரும் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பிறகுதான் 16-ம் தேதி மாவட்டக் கலெக்டரைச் சந்தித்து இதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும், அந்தப் பிணத்தை எங்களிடத்தில் தாருங்கள். நாங்கள் முஸ்லீம் மரபுப்படி அவர்களை அடக்கம் செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர் 19-ம் தேதி உத்தரவு கொடுத்திருக்கிறார். மறுநாள் காலை 7 மணிக்கு அந்த முனிசிபல் சிப்பந்தியை அழைத்துக் கொண்டு போலீசாரோடு 100 மக்கள் அங்கே சென்று இருக்கிறார்கள். புதைக்கப்பட்டதாகக் கூறிய இடத்தைத் தோண்டிப் பார்த்து இருக்கிறார்கள். 8 அடி ஆழம் தோண்டியும் பிணம் கிடைக்கவில்லை. எங்கே புதைத்தாய் என்று கேட்டால் சரியான பதில் இல்லை.

வேலூர் அரசினர் பெண்ட்லேண்டு மருத்துவ மனையில் இறந்த முஸ்லீம் மாது முஸ்லீம் மரபுப்படி அடக்கம் செய்யப் படாதது குறித்து

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 நவம்பர் 23

சுமார் 40 வயதை மதிக்கக்கூடிய அந்த அம்மையார் வீட்டை விட்டுச் செல்லும்போது பல ரூபாய் மதிப்புள்ள நகைகளை அணிந்து கொண்டு சென்றதாகவும், பணம் கொஞ்சம் வைத்து இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அவர்கள் ஸ்கூட்டரில் அடி பட்டு இறந்ததும், ஆஸ்பிடலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் சேர்க்கப்பட்டிருக்கிறபோது ஆஸ்பிடலில் டி.ஏ.எப். ரிப்போர்ட் எழுதுவார்கள். அந்த ரிப்போர்ட்டில் என்ன எழுதி யிருக்கிறார்கள்? போஸ்ட்-மார்ட்டம் செய்யப்பட்டதா இல்லையா? அது குறித்து ஒன்றும் விவரம் தெரியவில்லை. முஸ்லீம் பெண் என்று சரியாகத் தெரிந்ததாலேதான் மாலை முரசில் போட்டு இருக்கிறார்கள். முஸ்லீம் பெண் என்று தெரிந்து இருந்தும், அவர்கள் மிகவும் வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்று தெரிந்து இருந்தும், அவர்களுக்குச் சொந்தக்காரர்கள் யாரும் வர வில்லை யென்று அறிந்து இருந்தும், அந்தப் பிணத்தை பாகியாத்தி டத்தில் கொடுக்காமல், அதிகாரிகள் நகராட்சிச் சிப்பந்திகளி டத்தில் கொடுத்து ஆடுமாடுகளைப் புதைப்பது போல் புதைத்து விடுங்கள் என்று குறிப்பிட்டு . . .

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அனாதையாக ஆஸ்பத்திரியில் இறந்து போகிறார்கள் என்றால், உறவினர் யாரும் ஏற்கெனவே உரிமை கொண்டாடாவிட்டால் இப்படி வழங்குவதைத் தவிர ஆஸ்பத்திரியில் வேறு வழி கிடையாது. ஆகவே, ஆடுமாடுகளைப் போல் புதைக்கவில்லை. அப்படி ஒரு தவறான கருத்தை தாங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டாம். யாரையும் அப்படிச் செய்வதற்கு நாங்கள் அனுமதிப்பது இல்லை. அப்படி ஒரு நிலைமையும் இல்லை. இருக்கிற முறைதான் அது அப்படி ஒரு முறை இருக்கிற காரணத்தினால் கடுமையான சொற்களைத் தாங்கள் கையாள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அமைச்சர் அவர்கள் கடுமையான சொற்களை பிரயோகிக்க வேண்டாம் என்று கூறுகிறார்கள். அந்த முறையைப் பற்றிய பிரச்னை இல்லை. அதிகாரிகள் தவறுதலாக நடந்திருக்கிறார்கள். ஏதோ பெரிய தவறு நடந்திருக்கிறது. சட்டத்

திற்குப் புறம்பான காரியம் நடந்திருக்கிறது, அந்த மாது உண்மையாகவே ஸ்கூட்டரில் அடிபட்டு இறந்தார்களா அல்லது வேறு எங்கேயாவது எடுத்துச் செல்லப்பட்டாரா என்ற சந்தேகம் மாவட்ட மக்களிடையே நிலவி வருகிறது. நேற்று முன்தினம் ஊர்வலம், ஹர்த்தால் எல்லாம் நடைபெற்றிருக்கிறது. மக்களுடைய உணர்ச்சி தூண்டப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக மாவட்டத்தில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு அவசரமும், அவசியமும், முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு பிரச்னையாக இருப்பதினால், வழக்கம் போல சொல்லாமல், சபையில் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் லத்தீப் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த அம்மையார் 4—11—1973-ல் ஒரு மோட்டார் சைகிள் விபத்திலே சிக்கிக் காயமுற்றார்கள். காயமுற்றவுடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்ற சப்-இன்ஸ்பெக்டர் பெயர் கூட அப்துல் கனி என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். 4-ம் தேதி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டவர் 12-ம் தேதி வரையில் நினைவிழந்த நிலையில் இருந்து 12-ம் தேதி உயிர் துறந்து விட்டார். அப்படி உயிர் துறந்துவிட்ட பிறகு, வேலூர் வடக்கு இன்ஸ்பெக்டர் பிரேத விசாரணை நடத்தினர். அவர் பெயரும் திரு. யூனுஸ்கான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஹிந்து முஸ்லீம் தகராறாக வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். இந்த விளக்கம் சொல்கிறேன். இரண்டு அதிகாரிகளும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். அந்த அம்மையாரை முதலில் விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதும் ஒரு முஸ்லீம் அதிகாரிதான். 4-ம் தேதி ஆக்சிடெண்ட் ஆகி 12-ம் தேதி உயிர் பிரிந்த பிறகு பிரேத விசாரணை நடத்தியதும் இன்னொரு முஸ்லீம் அதிகாரிதான். அதற்குப் பிறகு 13-ம் தேதி மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு எந்தவிதமான விலாசமோ, பெயரோ தெரிவிக்கப்படாத நிலையில், மருத்துவத்துறை நிர்வாகி

கள் வேலூர் நகரமன்றத்தினரிடம் அந்தப் பிரேதத்தைத் தந்து விட்டார்கள், அனாதை என்ற அடிப்படையில் தந்துவிட்டார்கள். எட்டு நாட்கள் வரையில் யாரும் அந்த அம்மையாரை உரிமை கொண்டாடிக் கொண்டு வராத காரணத்தினால், அதற்குப் பிறகு அவர்கள் அந்தப் பிரேதத்தைப் புதைத்திருப்பதாக எனக்கு அங் குள்ள அதிகாரிகள் மூலம் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு, 12-ம் தேதி இறந்து, 13-ம் தேதி அந்தச் சடங்குகள் முடிந்த பிறகு, 19-ம் தேதி அன்று மேல்விசாரத்தில் உள்ள ஹக்கீம் கல்லூரி பிரின்சிபாலுக்குச் சொந்தக்காரரும், வேலூர் நகரம் அகமது பேக் சாயபு தெருவில் வசிப்பவருமான மு.கமது அனீப் என்பவர், இறந்துபோன அம்மையார் அணிந் திருந்த துணிமணிகள் மூலம் அடையாளம் கண்டு, இறந்து போனவர் தன்னுடைய சித்தி என்றும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அனந்தப்பூர் சுக்கூர் சாயபுவின் மனைவியாகிய திருமதி ஜைனபிபி என்றும் விவரங்கள் கூறினார். அதற்குப் பிறகுதான் புதைத்த இடத்திலிருந்து சவத்தை எடுக்க வேண்டும் என்ற முயற்சி நடைபெற்றது. முனிசிபாலிடியாரிடத்தில் ஒப்படைக்கப் பட்ட பிரேதத்தை நகர சுத்தித் தொழிலாளர் முனுசாமி என்பவர் தான் அடக்கம் செய்தார். அவர் 'நான் இங்கே பல பிணங்களைப் புதைத்தேன், எதை எந்த இடத்தில் என்று தேடி எடுக்க முடிய வில்லை, என்று கூறிவிட்டார். இருந்தாலும்கூட, இதைச் சாதாரண மாக விட்டுவிடாமல் சென்னையிலிருந்து, தகுதி மிக்க, பெரிய ஒரு சீனியர் அதிகாரி நேற்று இரவு அனுப்பப்பட்டிருக்கிறார். அதற் கான விவரங்களை அறிந்து உடனே எனக்குத் தகவல் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இந்த அளவிலே இதைப்பற்றி விவாதம் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இதில் சம்பந்தப்பட்டவர் டிராபிக் சப் இன்ஸ்பெக்டர் அப்துல் கனி, பிரேத விசாரணை நடத்தியவர் யூனுஸ் கான் என்ற தகவல்கள் எனக்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் வந்துவிட்டன. அந்தத் தகவல்களை வைத்துத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இங்கே உள்ள பிரச்னை ஹிந்து முஸ்லீம் என்ற பிரச்னை அல்ல. பொதுவாக இந்த மாவட்டத்திலுள்ள சம்பிரதாயங்களை மீறி குறிப்பிட்ட ஒரு குடும்

1973 நவம்பர் 23] [திரு. எம். ஏ. லத்திப்]

பந்தினுடைய மாதுவைப்பற்றி எந்தவிதமாக அதை அணுக வேண்டுமோ அந்த விதமாக அணுகுவதற்கு அதிகாரிகள் தவறிய காரணத்தினுல் இதை நான் கொண்டு வந்திருக்கிறேன். இதிலே வேறு சில பிரச்னைகளும் இருக்கின்றன. இவைகளை விவாதத்திற்கு இந்த அவையிலே எடுத்துக் கொள்ளக் கூடாது, அதைப்பற்றி வெளிப்படையாகப் பேசக் கூடாது என்ற காரணத்தினுல் பல விஷயங்களை நான் இங்கே வெளிப்படையாகப் பேசவில்லை. சில விஷயங்களை வெளிப்படையாகப் பேசினுல் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு, மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்கு தடங்கலாக இருக்கும் என்ற காரணத்தினுல் நான் பல விஷயங்களை இந்த அவையிலே சொல்லவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது இதுதான். அவர்கள் சில விளக்கங்கள் தந்திருந்தாலும், ஒரு பெரிய சர்க்கார் அதிகாரி சென்னையிலிருந்து அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் விசாரணை நடக்கும் என்று இந்த அவையிலே அறிவித்திருந்தும், ‘ஹவுஸ் பேனல்’ இந்த ஹவுசிலிருந்து சில பேர்களை அதற்காக நியமித்து விசாரணை செய்வதற்கு அரசு ஆவன செய்தால் நலமாக இருக்கும். மக்களிடையே ஏற்பட்டிருக்கிற அவநம்பிக்கையைப் போக்க ஒரு ‘ஹவுஸ் பேனலை’ நியமித்து விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : சென்னையிலிருந்து ஒரு பெரிய போலீஸ் அதிகாரி அனுப்பப்பட்டிருக்கிருர். அவர் சென்று விவரம் சேகரித்த பிறகு உரிய நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கும், உறுதிமொழிக்கும் பிறகு சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்கத் தேவை யில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லும்பொழுது இறந்தவர்களின் அடையாளம் தெரியாமல் போனுல், இதுபோன்று மருத்துவ நிலையங்களிலுள்ள அந்தப் பிரே தங்களை நகரசபை சிப்பந்திகளிடம் ஒப்படைப்பது என்பது

வழக்கமாக இருந்து வருகிறது என்று கூறினர். முஸ்லீம் என்று தெரிந்தவுடன் அங்குள்ள ஒரு முஸ்லீமுக்கு அறிவிப்புக் கொடுத்து அவர்வசம் பிணத்தை ஒப்படைப்பது என்பதுதான் இது வரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. சட்டம் எப்படி இருக்கிறதோ நான் அறியேன். ஆகவே, அந்த முறையில் ஏதேனும் தவறுகள் ஏற்படாத வண்ணம், எதிர்காலத்தில் இப்படி ஏதேனும் முஸ்லீம் பிணங்கள் எந்த இடத்தில் அனாதையாக இருந்தாலும், அதுபற்றி ஒரு முஸ்லீமுக்கு அறிவிப்புச் செய்வோம் என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவ மனைகளில் உள்ள பணிகள் பலவகையானவை. சிகிச்சை வழங்குவதுதான் முதல் கடமை. அனாதை என்று தெரிந்தவுடனே, முஸ்லீம் என்று தெரிந்தவுடனே, அப்பொழுதே ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர் அனாதைக்கு உறவினர் அல்லது கடமைப்பட்டிருக்கிறவர் என்று பதிவு செய்து கொண்டிருந்தால் அவர்கள் உடம்பை வழங்குவது எளிதாகிவிடும். சில நேரங்களில் எவ்வளவுதான் முஸ்லீம் சமுதாயத்திற்கு தனிப்பட்ட சில சடங்குகள், உரிமைகள் இருந்தாலும், தவறுகள் ஏற்பட்டு விடலாம். நல்லவேளையாக முஸ்லீம் என்று உடையிலிருந்து அடையாளம் தெரியவந்தது. பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. எந்த ஒரு முஸ்லீம் நபரும், அல்லது முஸ்லீம் ஜமாத்தைச் சேர்ந்தவரும் அனாதையாக சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த 6, 7 நாட்களிலும், அந்த அனாதை மீது கவலை கொண்டு கவனிக்க முன்வரவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. அந்த அடிப்படையிலே யாராவது அம்மாதிரி தெரிவித்திருக்க வேண்டும். அப்படி யாரும் தெரிவிக்கவில்லை. ஆகவே, இம்மாதிரி எங்கேயாவது விபத்து ஏற்பட்டால், அந்த விபத்தில் சிக்கியவா முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவரானால், முஸ்லீம் அனாதை என்று தெரிந்தால் உடனே முஸ்லீம் ஜமாத்திலிருந்து உரிமையைத் தெரிவிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.